என்று தடுக்க முடியாது. ஏனென்றால் பன்னிரண்டு மைல்களுக்கு அப்பால் அதாவது இன்டர் நேஷனல் வாட்டர்ஸில் யார் வேண்டுமானாலும் மீன் பிடிக்கலாம்.

மீன் வளம்

* 311 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மீன் வளத்தை அதிகப்படுத்தவும், பிடிப்பதற்கும் தீவிர திட்டம் (Crash Programme) அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : செயற்குறிப்பில் இல்லை ; நடைமுறையில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ' கிராஷ் புரோகிராம் ' என்று ஒரு திட்டத்தை வைத்திருக்கிறோம். அதைப்போன்று மீன் பிடிப்பதிலும் ஒரு கிராஷ் புரோகிராம் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். இன்றைய உணவுப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்பதால் அரசாங்கம் இத் திட்டத்தைப் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இப்போது ஒரு கிராஷ் புரோகிராம் ஏற்கெனவே நிறுவப்பட்டு, நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. அதில் சிலவற்றை இங்கே குறிப்பிடுகிறேன் :—

இராமஸ்வரம் பறங்கிப்பேட்டை ஆகிய ஊர்களில் 2 டன் பனிக்கட்டிப்பொறி-குளிர்ப்பதன அறைகள் இரண்டையும், இராயபுரம், அடையாறு, புதுப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பாளையங்கோட்டை ஆகிய ஊர்களில் ஆறு குளிர் அறைகளையும் நிறுவுதல்.

நான்காவது திட்டக் காலத்தில் அதிக படகுகளைக் கட்டும் பணியை மேற்கொள்ள போதுமான பணியாளர்களை நியமிப்பதற்கும், சாதனங்கள் வாங்குவதற்கும் வகை செய்து, மெரினா மற்றும் இராயபுரத்திலுள்ள படகு கட்டும் தளங்களை வலுப்படுத்துதல்.

நான்காவது திட்டக் காலத்தில் கூடுதலாகத் தேவைப்படும் பயிற்சி பெற்ற பணியாளர் குறித்த தேவையை ஈடுசெய்ய கடலூர், குளச்சல் ஆகிய ஊர்களில் பயிற்சி நிலையங்கள் இரண்டை அமைத்தல்.

1971 டிசம்பர் 13]

மீன்பிடிக்கும் காலங்கள், மீன்பிடிப் பகுதிகள் முதலியவற்றைக் கண்டுபிடிக்க, கடலுக்கருகிலுள்ள நீரை ஆய்வு செய்ய சென்னையில் ஆய்வு—அண்மைக்கடல் மீன்பிடி நிலையத்தைத் தொடங்குதல்.

இவை போன்ற பல திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, குளச்சல் போன்ற மீன் தாராளமாகக் கிடைக்கின்றப் பகுதிகளை இந்த சிறப்புத் திட்டத்தில் ஒன்றாக எடுத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதற்கும் திட்டங்கள் இருக்கின்றன.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில், வெளிநாட்டார் அதிகமாக விரும்பி உண்ணுகின்ற சென்னாக்குன்னி, நண்டு, கடல்பாசிகள் கிடைக்கின்றன. அவைகளை நல்லமுறையில் பக்குவப்படுத்தி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் ஏதாவது அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசுத் துறை மூலமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் எதுவும் இல்லை. ஆனால் தனியார்கள் அப்படிப்பட்ட மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், நமது அரசாங்கத்தினால் கொடுக்கப்படுகிற மெகனேஸ்டு எஞ்சின்கள் பொருத்தப்பட்ட போட்டுகள் பழுதடைந்து, இயங்காமல் கிடக்கின்றன. அவைகளை ரிப்பேர் செய்வதற்கு ஸ்பேர் பார்ட்ஸ் கிடைப்பதில்லை. அது ஏன் என்று அரசாங்கம் ஆராய்ச்சி செய்ததா ? அதுபற்றி நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது ; ஆராய்ச்சியும் செய்துகொண்டிருக்கிறது.

கோணப்பராயன்குளம் அரிசனங்களுக்கு குடிநீர் கிணறு

* 312 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் கிராம தாழ்த்தப்பட்ட மக்கள் நீண்டகாலமாக குடிநீர் கிணறு இல்லாமல் சிரமப்படுவது பற்றி பொதுமக்களால் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(ஆ) தற்போது எந்த நிலையில் உள்ளது ?